பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: கார்த்திகை 6 (21—11—68) வியாழன் ★ வெளியூர்: கார்த்திகை 7 (22—11—68) வெள்ளி [இதழ்: 130

பரிசுச் சீட்டுகள்

மத்திய அரசு ஒப்புதல்

புதுடில்லி, நவ. 20—
மாநில அரசுகள் பரிசுச் சீட்டுகள் நடத்துவதற்கு அனுமதியளிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதாகவும், ஆனால் ஒரு மாநிலத்தின் பரிசுச் சீட்டுகளை மற்றொரு மாநிலத்தில் விற்பதற்கு அந்த மாநில அரசின் ஒப்புதல் பெற வேண்டும் என்றும் உள்துறைத் துணையமைச்சர் வித்தியா சரண் சுக்லா

(4-ம் பக்கம் பார்க்க)

திட்டக் குழுத் துணைத் தலைவருடன் மொரார்ஜி மோதல்

நான்காம் திட்ட முதலீடு பற்றி கருத்து வேற்றுமை

புதுடில்லி, நவ. 20—
நான்காவது திட்டம் சிறிதாக இருக்க வேண்டுமா அல்லது பெரிதாக இருக்க வேண்டுமா என்பதுபற்றி காட்கில்—மொரார்ஜிதேசாய் இடையே மோதல் ஏற்பட்டது. திட்டத்துக்கு வசதிகள் பற்றி அமைச்சரவையில் விவாதம் நடந்தபோது இந்த மோதல் காணப்பட்டது.

இன்றையக் கூட்டத்தின்போது 'நான்காவது திட்டத்தில் ரூ. 15,000 கோடிக்காவது அரசுத் துறை முதலீடு இருக்க வேண்டும்' என டாக்டர் காட்கில் கேட்டுக்கொண்டதாகத் தெரிகிறது.

முன்பு உருவாக்கப்பட்ட நான்காவது திட்ட நகலில் ரூ. 16,000 கோடி அரசுத் துறை முதலீடு செய்யத் திட்டமிடப்பட்டது; ஆனால் ரூ. 15,000 கோடி முதலீடு செய்யவும், திட்ட காலத்தில் சுமார் ரூ. 4,000 கோடிக்குக் கூடுதல் வரிவிதிக்கவும் வேண்டியிருக்கும்; எனவே, மத்திய அரசு கூடுதலாக ரூ. 2,500 கோடியும், மாநிலங்கள் கூடுதலாக ரூ. 1500 கோடியும் திரட்ட வேண்டும்' என காட்கில் யோசனை கூறியதாகத் தெரிகிறது.

ஆனால், 'கணிசமான கூடுதல் வரி விதிப்பு இயலாது' என்று தேசாய் கூறியதாகத் தெரிகிறது; 'தற்போதுள்ள அளவு வரிகளுக்கும் கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது; எப்படியும் மாநிலங்கள் ரூ 1,500 கோடி எழுப்பும் என நான் எதிர்பார்க்க முடியவில்லை' என்றார்.

"நிதிக் குழுச் சிபாரிசுகளால் மத்திய அரசு வசதிகளில் வெட்டு ஏற்படக்கூடும்; இறுதி அறிக்கையில் கூடுதல் மாற்றத்துக்கு நிதிக் குழு சிபாரிசு செய்திருந்தாலும், இடைக் கால அறிக்கை மத்திய வசதிகளில் ரூ. 200 கோடி வெட்டு செய்கிறது" என்றும் அவர் சுட்டிக்காட்டி மேலும் கூறியதாவது :—

"மற்றும் திட்டம் சம்பந்தமற்ற செலவு திட்ட காலத்தில் ரூ. 4,000 கோடி அதிகரிக்கும்; பாதுகாப்புச் செலவு ரூ 1,000 கோடி அதிகரிக்கும்; அந்நியக் கடன்களுக்குத் தவணைகள் ரூ. 2,500 கோடிக்கு அதிகரிக்கும்.

"நான்காவது திட்டத்தில் பற்றுக்குறை வரவு-செலவுத் திட்ட முறையை மேற்கொள்வது பற்றியும் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்; விலைவாசி நிலைமை நிலையாக இருந்தால்தான் பற்றுக்குறை வரவு-செலவுத் திட்ட முறையை மேற்கொள்ளலாம்."

வேலைநிறுத்தம் செய்ய ஊழியர்களுக்கு உரிமையில்லையாம்

அரசு மேற்கொண்ட நிலையில் மாற்றமில்லையாம்

நாடாளுமன்ற மேலவையில் உள்துறையமைச்சர் பதில்

புதுடில்லி, நவ. 20—
சஸ்பெண்டு செய்யப்பட்டும், வேலைநீக்கம் செய்யப்பட்டும் உள்ள மத்திய அரசு ஊழியர்கள் அனைவரையும் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வெளியிட்ட கோரிக்கையை உள்துறை அமைச்சர் சவாண், இன்று மீண்டும் கண்டிப்பாக நிராகரித்துவிட்டார்.

"இந்தப் பிரச்சினையில் அரசு மேற்கொண்டுள்ள நிலை மாறவில்லையென்றும், தனது ஊழியர்களின் தேவையில் அதற்கு அனுதாபம் உண்டு என்றும், சிலருக்கு வேலை போய்விட்டிருப்பது பற்றியும், சிலர் வேலை இழக்கும் நிலையில் இருப்பது பற்றியும் அரசு வருந்துகிறது என்றும், ஆனால் தனது ஊழியர்களிடை கட்டுப்பாடு நிலவச் செய்யவேண்டியது அரசின் கடமையென்றும் அவர் கூறினார்.

"வேலை நிறுத்தம் செய்வது அரசு ஊழியர்களின் அடிப்படை உரிமை என்பதை ஏற்றுக்கொள்வதற்கு நான் தயாராக இல்லை; அது அவர்களுக்குள்ள அடிப்படை உரிமை என்றே வைத்துக் கொண்டாலுமகூட, இந்தக் குறிப்பிட்ட வேலைநிறுத்தம் நியாயமற்றது --- சட்டவிரோதமானது" என்றும் அவர் சொன்னார்.

மத்திய ஊழியர் வேலை நிறுத்தம் பற்றி இரண்டாவது நாளாக நடைபெற்ற விவாதத்தின்போதுதான் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலிருக்கும் 11,000 ஊழியர்களும் வன்செயல்களில் ஈடுபட்டவர்களாக இருக்கமுடியாது; அவர்களது பிரச்சினையை மறுபரிசீலனை செய்யவேண்டும்; அமைச்சரிடம் முறையீடு செய்துகொள்ள உரிமைஇருக்க வேண்டும்" என்று எம். என். கௌல் (நியமன உறுப்பினர்) வற்புறுத்தினார்.

சென்னை, நவ. 21—
"1961-ஆம் ஆண்டு இந்திய வழக்கறிஞர்கள் சட்டத்தைப் புதுச்சேரிக்கு விரிவுபடுத்தியது செல்லத்தக்கதே" எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் நாட்டில் இந்திப் பள்ளிகள் திறக்கப்படுமா?

மத்திய அரசிடம் திட்டம் இல்லையாம்

என்றாலும் இந்திப் பிரச்சார சபையின் கோரிக்கை பரிசீலனையாம்

புதுடில்லி, நவ. 20—
"தமிழகத்தில் இந்தி கற்பிக்கும் பள்ளிகளைத் திறப்பதற்கான எண்ணம் எதுவும் மத்திய அரசுக்கு இல்லை"

என்று கல்வித்துறைத் துணையமைச்சர் திரு. ஷேர் சிங், நாடாளுமன்ற மேலவையில் கழக உறுப்பினர் தில்லை வில்லாளன் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"தமிழகத்தில் இந்தி கற்பிக்கும் ஓராசிரியர் பள்ளிகளை நடத்துவதற்காகச் சென்னையில் உள்ள தட்சிண பாரத இந்தி பிரசார சபா பண உதவி கோரியிருக்கிறது; அந்தக் கோரிக்கை பரிசிலனையில் இருந்து வருகிறது.'

பதவிக் காலம் முடிந்ததால் திரும்பிவிட்டனராம்

புதுடில்லி, நவ. 20—
எண்ணெய் -- எரிபொருள் நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த மூன்று இரஷ்ய நிபுணர்கள், அசாம் பற்றிய சில இரகசியத் தகவல்களைத் திரட்டினர் என்ற காரணத்திற்காக இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்டனர் என்ற செய்தியை, இந்திய அரசு மறுத்திருக்கிறது.

பதவிக் காலம் முடிந்துவிட்டதால் அவர்கள் இரஷ்யாவுக்குத் திரும்பி சென்றுவிட்டார்களாம்.

விவசாயப் புரட்சி

இந்தியாவும் சேருவதற்கு உலக பாங்கி உதவும்

புதுடில்லி, நவ. 20—
"உலகில் ஏற்பட்டுவரும் விவசாயப் புரட்சியில் இந்தியாவும் கலந்து கொள்வதற்கு உதவி செய்ய உலக பாங்கி விரும்புகிறது"

என்று உலக பாங்கியின் தலைவர் மக்நமாரா கூறியிருக்கிறார்.

"வசதிகளைப் பெறுவது எவ்வளவு சிரமமாகத் தோன்றினாலும், வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற ஏதாவது வழிகாண வேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழக அமைச்சர்களுடன் பிரச்சினை பற்றி விவாதிப்பார்

வெள்ளியன்று சென்னைக்கு வரும் உலக பாங்கியின் தலைவர், முதலமைச்சர் அண்ணா அவர்களையும், மற்றும் அமைச்சர்களையும் சந்தித்து இங்கு நடைபெற்றுவரும் வளர்ச்சிப் பணிகள் பற்றி விவாதிப்பார்; இது சம்பந்தமான பல்வேறு அம்சங்கள் பற்றியும் தமிழக அரசு, அவரிடம் தெளிவாக எடுத்துரைக்கக்கூடும்.

பாடி, அம்பத்தூரிலுள்ள தொழில் நிறுவனங்கள் அனைத்தையும் அவர் சுற்றிப் பார்ப்பார்.

தமிழகத்தில் மா சே-துங் சீடர்கள்!

வன்முறைப் புரட்சிக்குத் தூண்டுதல்?

மத்திய அரசு கூர்ந்து கவனித்துவருவதாகத் தகவல்

புதுடில்லி, நவ. 20—
"தமிழகத்தில், நாஞ்சில் செல்வன் என்பவரை அமைப்பாளராகக் கொண்டு இயங்கும் 'செங் கொடி இயக்க'த்தின் நடவடிக்கைகளை மத்திய அரசு கூர்ந்து கவனித்துவருகிறது; தக்க நேரத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்"

என்று உள்துறைத் துணையமைச்சர் வி. சி. சுக்லா, நாடாளுமன்ற மேலவையில் கூறினார்.

"மா சே-துங் தத்துவங்களின்படி வன்முறைப் புரட்சிக் கருத்துக்களை இந்த இயக்கம் பிரசாரம் செய்துவருவதாகத் தமிழக அரசிடமிருந்து செய்தி கிடைத்திருக்கிறது" என்றும் அவர் கூறினார்.

தமிழகத்தின் திட்டம்

டெல்லியில் பரிசீலனை

புதுடில்லி, நவ. 21—
தமிழகத்தின் நான்காம் ஐந்தாண்டுத் திட்டங்கள் குறித்து தமிழக அரசின் பிரதிநிதிகளுக்கும்— திட்டக் குழுவுக்குமிடையே நேற்று விவாதம் நடைபெற்றது.

விவாதம் தொடர்ந்து இன்றும் நடைபெறுகிறது.

செஞ்சீனாவுக்கு இடமில்லை

ஐ.நா. பேரவையில் முயற்சி தோல்வி

ஐ. நா., நவ. 20—
உலக நாடுகள் (ஐ.நா.) மன்றத்தில், செஞ்சீனாவைச் சேர்க்கும் முயற்சிகள் மீண்டும் தோல்வியுற்றன.

'செஞ்சீனாவைச் சேர்க்க வேண்டும்' என்னும் கம்போடிய – அல்பேனிய தீர்மானத்துக்கு ஆதரவாக 44 வாக்குகளே கிடைத்தன; எதிராக 58 வாக்குகள் பதிவாயின.

126 நாடுகளின் உறுப்பினர்களடங்கிய ஐ. நா. பேரவையில் இத்தீர்மானம் கொண்டுவரப்பட்டது. 23 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை; ஒரு நாட்டின் பிரதிநிதி வரவில்லை.

கடந்த 19 ஆண்டுக் காலத்தில் ஐ.நா. பேரவையில் செஞ்சினாவைச் சேர்த்துக்கொள்ளுவதற்கு நடைபெற்ற 18-வது முயற்சியாகும் இது.

கடந்த ஆண்டு ஐ.நா. பேரவையில் இதே பிரச்சினை மீது வாக்கெடுப்பு நடந்தபோது பிகிங்குக்கு ஆதரவாக 45 வாக்குகளும், எதிராக 58 வாக்குகளும் கிடைத்தன; 17 பேர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. அப்போது ஐ.நா. பேரவையின் மொத்த உறுப்பினர் தொகை 122-தான்.

அதற்குமுன்பாக அமெரிக்கா முன்னின்று 16 நாடுகளின் ஆதரவுடன் ஒரு தீர்மானம் கொண்டுவந்தது; 'சீனாவின் பிரதிநிதித்துவத்தில் மாறுதல் ஏதேனும் செய்ய வேண்டுமானால், அதனை மிக முக்கியப் பிரச்சினையாகக் கருதி, மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை பெறவேண்டும்' என்று அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது; அத்தீர்மானம் மிக எளிதில் நிறைவேறிவிட்டது. அந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக 73 வாக்குகளும், எதிராக 47 வாக்குகளும் கிடைத்தன.

காந்தியார் சொன்னது கவைக்குதவாதாம்!

வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப ஊதியம் வழங்க இயலாதாம்

' ஆயிரம் ரூபாய்க்குமேல் சம்பளம் கூடாது ' என்பதும் பொருந்தாதாம்

துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜியின் கூற்று

புதுடில்லி, நவ. 19—

'மத்திய அரசு ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவில் ஏற்படும் உயர்வை முழு அளவு ஈடு செய்யவேண்டும்' என்ற கோரிக்கையை மாநிலங்களவையில், துணைத் தலைமையமைச்சரும் நிதியமைச்சருமான மொரார்ஜி தேசாய் நிராகரித்துவிட்டார்.

" அனைவருக்கும் ஒரேமாதிரியான ஊதியத்தை அளிக்க வேண்டும் என்ற மகாத்மா காந்தியின் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளுவதோ அல்லது செயல்படுத்துவதோ இயலக்கூடியதன்று " என்று அவர் கூறினார்.

" வாழ்க்கைச் செலவு உயர்வை ஏன் அரசு முழு அளவு சரிக்கட்டவில்லை? அதிகச் சம்பளம் ரூ. 1,000 மட்டுமே இருக்கலாம் என்ற கோட்பாட்டையும் அனைவருக்கும் ஒரே மாதிரியான ஊதியம் தரவேண்டும் என்ற மகாத்மா காந்தியின் கோட்பாட்டையும் ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை "

என்று ராஜ் நாராயண் என்பவர் கேட்டபோது, நிதியமைச்சர் கூறியதாவது :—

" வாழ்க்கைச் செலவு உயர்வை முழு அளவு சரிக்கட்ட வேண்டும் என்ற கோட்பாட்டை அரசு ஒப்புக்கொள்ளவில்லை.

" ஊழியர்களுக்குக் கிராக்கிப் படி வழங்க 12 மாத அகில இந்தியத் தொழிலாளர் பிரிவு பயன்படுத்துவோர் பண்ட விலைக் குறியீட்டெண்ணைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும் இப்போதைய ஏற்பாட்டை மாற்றுவது இயலாது.

" வருமானத்தில் ஏற்றத்தாழ்வு 1.5 என்ற விகிதத்தில் இருக்க வேண்டும் என்று காந்தியார் கூறியிருக்கிறார். இதை ஒப்புக்கொள்வதோ அல்லது செயல்படுத்துவதோ இயலக்கூடியதன்று.

" நம்மிடம் இருப்பதைத்தான் வழங்கமுடியும். விலை உயரும்போது, மக்களில் பாதிப் பேருக்குமேல் நிவாரணம் எதுவும் கிடைப்பதில்லை என்பதையும் அவர்களுடைய நிலைமை அரசு ஊழியர்களைவிட மிக மோசமானது என்பதையும் உறுப்பினர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

" மக்களில் பாதிப்பேருக்குமேல் தொல்லையுறும் வகையில் அரசு ஊழியர்களின் நிலைமையை நாம் உயர்த்திக்கொண்டே போக முடியாது. இப்போதைய நிலை உயராதவரையில், கிராக்கிப் படிக்கான ஏற்பாட்டை மாற்றுவது இயலக்கூடியதன்று."

தமிழ் மணம் வீசும் பெயர்கள்!

தமிழக அரசின் இல்லங்கட்குச் சூட்டப்பட்டன

சென்னை, நவ 19—

அடையாற்றில் உள்ள அரசினர் இல்லங்களுக்குத் தூய தமிழிலேயே பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

இந்த இல்லங்களுக்கு முன்பு இருந்தபெயர்களும் இப்போதிருந்த பெயர்களும் வருமாறு :—

உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் இருக்கின்ற 'விஜய விகார்' மாளிகைக்கு 'பொதிகை' என்று இப்போது பெயரிடப்பட்டிருக்கிறது.

வேளாண்மை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி குடியிருந்த 'கிரீன்வேய்ஸ்' மாளிகைக்கு இப்பொழுது 'அன்பு' எனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

சட்ட அமைச்சர் செ. மாதவன் குடியிருக்கின்ற 'மோகன'வின் பெயர், 'பூம்பொழில்' என மாற்றப்பட்டுள்ளது.

நலத்துறை அமைச்சர் எஸ், ஜே. சாதிக் பாட்சா இருக்கின்ற 'ஹோவிங் ஹாம்' இப்போது 'தாமரை' என்று பெயர் பெறுகிறது.

உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துசாமி வகிக்கின்ற 'ரிவர்சைடு' இல்லத்திற்கு 'பொன்னி' எனப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

கல்வி–தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் வசிப்பதும், மவுண்ட் ரோடுக்கு அருகிலுள்ளதுமான 'கூவம் அவுஸ்', இனி 'கூவம்' என அழைக்கப்படும்.

மற்றும் உள்ள அரசு இல்லங்களின் பெயர்களும் மாற்றப்பட்டிருக்கின்றன ; அவை வருமாறு :—

பழைய பெயர்	புதிய பெயர்
'செர்வெல்'	'குறிஞ்சி'
'கிராங்கே'	'காஞ்சி'
'பிராடிகாசில்'	'தென்றல்'
'கிரான்லே'	'மல்லிகை'
'பிரிட்ஜ் அவுஸ்'	'சுடர்'

சர்க்கரைக் கட்டுப்பாடு நீங்காது

மத்திய அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, நவ. 21—

" சர்க்கரைக்கு இப்போது உள்ள ஓரளவு கட்டுப்பாடு நீடிக்கும்; சர்க்கரைக் கட்டுப்பாட்டை அடியோடு நீக்கிவிடக் கூடிய வகையியிலோ, அல்லது அதற்கு முழுக் கட்டுப்பாடு விதிக்கும் வகையிலோ கொள்கை மாற்றப்படமாட்டாது "

என்று மத்திய உணவு—விவசாய அமைச்சர் ஜெகஜீவன்ராம் கூறியிருக்கிறார்.

கட்டுப்பாட்டை அடியோடு நீக்குவது அபாயகரமான விளைவுகளை உண்டுபண்ணக் கூடும் என்றும், கரும்பு உற்பத்தியாளர்களுக்கு அதனால் பயன் ஏற்படாது என்றும், வட இந்தியாவில் பல சர்க்கரை ஆலைகளை மூடவேண்டி ஏற்படலாம் என்றும் அமைச்சர் கூறினார்.

இப்போதைய ஏற்பாட்டின்படி சர்க்கரை உற்பத்தியில் 30 சதவிகிதம் தாராள மார்க்கெட்டில் விற்க அனுமதிக்கப்படுகிறது; 70 சதவிகிதம் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது.

ஐந்து மாவட்டங்களில் ஏழு நாட்கள் — (3)

[எஸ். ஆர்.]

'மனிதக் கடவுள்'கள்!

அது ஆலயமல்ல! அங்கே இருந்தவர்களும் பக்தர்களல்லர்!

அது ஒரு மருத்துவமனை — அங்கே இருந்தவர்கள் நோயாளிகள்!

ஆனால் அங்கே தெய்வங்கள், மனிதர் உருவில் மருத்துவர்களாக நடமாடியபடி இருந்தன!

இதோ ஒரு டாக்டர்! எங்களைவிட விரைவாக நடந்தபடி இருக்கிறார்! வழியெல்லாம் அவருக்கு வழிபாடு! கைகளை அசைக்க முடியாத நோயாளிகள் தலையைத் தாழ்த்துகின்றனர்! படுத்திருந்தபடி இருந்தவர்கள் பார்வையால் வணக்கம் சொல்லுகின்றனர்!

ஓட்டத்தின் வேகத்தில் நடந்த அவர் — ஓர் இடத்தில் நின்று, 'ரங்கநாதன்' என்று அழைக்கிறார் ; 'ஐயா' எனப் பதிலளித்தபடி நடுத்தர வயதுடைய ஒருவர் ஓடி வருகிறார் ; 'உட்கார் — எழுந்திரு — கைகளை ஆட்டு — கால்களை மடக்கு' என அடுத்தடுத்துக் கட்டளை பிறப்பிக்கிறார் டாக்டர்! அத்தனையும் செய்து காட்டுகிறார் அந்த மனிதர்! அனைவரையும் போன்றவர்தான்—வேறுபாடு ஏதும் காணோம் ; ஆனால், அந்த டாக்டர் கூறுகிறார்—'இவருடைய இருதயத்தில்தான் நாங்கள், கன்றுக் குட்டியின் குள், 'இப்போது இவரது இயக்கம் இயங்குவது இருதயத்தினால் அல்ல — இந்த இயந்திரத்தினால்தான்' என்று கூறிய அவரது 'நெஞ்சத் துணிவு' எங்களை இன்னும் அயர வைத்தது!

வாரம் ஒன்றுக்கு இரண்டு முறை இருதய அறுவைச் சிகிச்சை நடத்தும் மருத்துவமனையின் இயந்திரத்துக்கு அருகில் நின்றுகொண்டிருந்த ஒரு நுணுக்கவாதியை எங்களுக்கு அறிமுகப்படுத்திய டாக்டர் ஜோசப், 'இந்த இயந்திரம், இறக்குமதி செய்யப்பட்டது ; ஆனால் இவர் — தமது திறமை மூலம் — இதில், மேலும் ஒரு சிறப்புச் சேர்த்திருக்கிறார் ; அறுவைச் சிகிச்சை நடந்துகொண்டிருக்கும்போதே ஏற்படும் எதிர்பாராத மின்சாரத் தடையினைச் சமாளிக்கக் கைகளினாலேயே இயந்திரத்தை இயங்க வைத்துக் கொள்ளும் முறையை இவர் கண்டுபிடித்ததுதான்' என விளக்கினார்.

அவரைப் பாராட்டவும் மறந்து, எங்கள் இதயங்கள் படபடத்தன — 'இருதயங்கள் இந்த மருத்துவர்களிடம் என்ன பாடுபடுகின்றன' என்பதனை நினைத்து!

இப்படி, ஆர்வமுடன் எங்களுக்கு விளக்கிவந்த அவரிடம், 'இங்கு இதனைப் பார்ப்பதற்கு நாங்கள் ஒதுக்கியிருப்பது ஒரு மணி நேரம்தான்'



வேலூர் மருத்துவமனையில்

இருதயத்திலிருந்து எடுக்கப்பட்ட வால்வினைப் பொருத்தியிருக்கிறோம்' என்று!

தென் கிழக்கு ஆசியாவிலேயே முதன்முறையாகக் கடந்த மார்ச் 21-ம் நாள் வேலூர் கிறித்துவ மருத்துவமனையில் நடந்த இருதய அறுவைச் சிகிச்சை பற்றிய நிகழ்ச்சியை எங்கள் சுற்றுலாக் குழுவினருக்கு விவரித்த டாக்டர், அந்தச் சாதனையை நடத்திக் காட்டிய எட்டு நிபுணர்களில் ஒருவர் ; பெயர் — டி. எம். ஜோசப் ; 'டாக்டர்' என்று சொன்னால்தான் தெரிகிறது ; ஏனெனில், தோற்றத்தில் ஒரு மாணவராகவே திகழ்கிறார்!

இந்த வியப்புத் தணியுமுன் மேலும் பேசுகிறார் அவர்—'இருதயத்தையே மாற்றியமைக்கும் அறுவையையும் இங்கே நடத்த முடியும் ; அதற்கான தேவை இல்லை ; அப்படியே நடந்தாலும், அறுவைச் சிகிச்சைக்குப் பின் அளிக்கப்படவேண்டிய வசதி இல்லை ; எங்களால் முடிந்த ஒன்றே தவிர, முடியாத ஒன்றல்ல' என்று!

மனித இயக்க உணர்வுகளின் உயிரான இருதயத்தைக் கரைத்துக் குடித்திருக்கிறார்கள் இவரும் — இவரையொத்த டாக்டர்களும் ; இருதய நோயுள்ள ஒருவரின் படுக்கைக்கு அருகில் எங்களை அழைத்துச் சென்று, 'அவரது நெஞ்சம் எப்படி இயங்குகிறது என்பதற்கான கண்ணாடி இது' எனக் கூறி பக்கத்திலிருந்த ஒரு சாதனத்தைக் காட்டுகிறார் அவர் ; எங்கள் ஆச்சரியம் மறைவதற் என்று கூறியபோது, உள்ளபடியே அவர் துணுக்குற்று விட்டார்!

'நோயாளிகளிடம் செலவழிக்கும் நேரத்தைப் போலவே பத்திரிகையாளர்களிடம் செலவழிக்கும் நேரமும் பலனளிக்கக்கூடியதே' என்பதனை உணர்ந்திருந்த அந்த டாக்டர், 'இன்னும் என்னென்னவோ சாதனைகளையெல்லாம் உங்கள் மூலம் நாட்டுக்கு அறிமுகப்படுத்த வேண்டியிருக்கிறதே' என்று சொல்லுவதுபோல் தென்பட்டார்.

நிதி மிகுந்தவர்கள் தந்த பொற்குவைகள், நோயாளிகள் தந்த சிறுசிறு கட்டணங்களை மட்டும் கொண்டு — அரசினர் உதவி ஏதுமின்றி இயங்கிக்கொண்டு — வேலூரின் பெயரினை உலக மருத்துவத்தில் நிரந்தரமாக ஏற்றியிருக்கும் இந்தக் கிறித்துவ மருத்துவமனை, தமிழகத்தின் பெருமைக்கு மற்றுமோர் அணிகலனாகும்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஓர் இரவில், பராமரிக்க யாருமின்றி பிரசவ வேதனையில் இறந்துவிட்ட மூன்று கர்ப்பிணிகளின் முடிவுதான், 'இடா ஸ்கடர்' என்னும் அயல் நாட்டுப் பெருமாட்டியின் மூலம் இங்கு இந்த மருத்துவமனையை நிறுவக் காரணமாக அமைந்தது.

1900-ம் ஆண்டில் 'ஒரே படுக்கை — ஒரே ஒரு டாக்டர்' என்ற நிலையில் துவக்கப்பட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

மாநிலத்துக்கு மத்திய அரசு போலீசு

அனுப்புவதற்குமுன் மாநில அரசைக் கலக்க வேண்டிய அவசியமில்லையாம்

நாடாளுமன்றத்தில் உள்துறையமைச்சர் பதில்

சென்னை, நவ. 19

கேரளத்துக்கு மத்திய ரிசர்வ் போலீசை அனுப்புவதற்குமுன் கேரள அரசைக் கலந்தாலோசிக்கவில்லை என்றும், அப்படி முன் கூட்டிக் கலந்தாலோசிக்க வேண்டியதற்கான காரணம் ஒன்றும் ஏற்படவில்லை என்றும் உள்துறையமைச்சர் திரு. ஒய். பி. சவான் மக்களவையில் கூறினர்.

மத்திய அரசு ஊழியர் அடையாள வேலை நிறுத்தத்தை யொட்டி மத்திய அரசின் கட்டளையைக் கேரள அரசு செயல் படுத்தாதது குறித்து மன்றத்தில் கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புப் பிரச்சினைக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்விதம் கூறினர்.

கேரளத்துக்கு மத்திய ரிசர்வ் போலீசை அனுப்புவது பற்றி மிக உயர்ந்த ஒரு சட்ட ஆலோசகரின் ஆலோசனையையும் மத்திய அரசு பெற்றதாக அவர் மேலும் கூறினர்.

மத்திய அரசின் கட்டளையைச் செயல்படுத்துவதற்கு உறு துணையாக மாநில அரசை முன்கூட்டிக் கலந்தாலோசிக்காமலே மத்திய போலீசை அனுப்பிவைக்கலாம் என்று அந்த உயர்தர சட்ட ஆலோசகர் கூறியதாகவும், இதற்கு முன்பும் இப்படி வங்கா ளத்துக்கும், அசாமுக்கும் மத்திய போலீசு அனுப்பி வைக்கப்பட் டிருப்பதாகவும் சவான் கூறினர்.

"அந்த மிக உயர்ந்த சட்ட ஆலோசகர் யார்? சட்ட அமைச்சர் கோவிந்தமேனனைத் தான் குறிப்பிடுகிறீர்களா?" என்று பி. கே. வாசுதேவன் நாயர் கேட்டார்.

இதற்குச் சவான் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"அவர் உங்கள் பொறுப்புக்குரி குரியவர் என்பதை நான் அறி வேன்."

உடனே திரு. வாசுதேவன் நாயர், 'எங்கள் கேரளத்திலிருந்து உங்களுக்கு அப்படிப்பட்ட ஒரு சட்ட நிபுணரை வழங்கியிருப்பது குறித்து நாங்கள் பெருமையடை கிறேம்' என்றார்.

"இதைக் கேட்க நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்" என்றார் சவான்.

"இன்றியமையா ஊழியப் பாது காப்பு அவசரச் சட்டம், நாடாளு மன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தைப் போன்றதே" என்று சவான் கூறியபோது, கம் யூனிஸ்டு உறுப்பினர்கட்கும், ஜன சங்க—காங்கிரசு உறுப்பினர்கட்கு மிடையே வாக்குவாதம் ஏற்பட் டது.

கம்யூனிஸ்டு உறுப்பினர்களும், தி. மு. க. உறுப்பினர் வி. கிருஷ்ண மூர்த்தியும், இந்த அவசரச் சட் டத்தை, 'திருவாளர் சவானின் சட்டம்' என்று வர்ணித்தனர்!

கருத்தடைச் சாதன இறக்குமதி ஏன்?

டி.டி.கே. பிள்ளைகளுக்குச் சலுகை?

புதுடில்லி, நவ. 20—

கருத்தடைச் சாதன இறக்கு மதித் துறையில் மத்திய அரசு கடைபிடிக்கும் கொள்கைக்கு மாநிலங்களவையில் எதிர்க் கட்சி யினருடன் சேர்ந்து ஆளும் கட்சி உறுப்பினர்களும் எதிர்ப்புத் தெரி வித்தனர்.

ஆங்கிலக் கம்பெனிக்கு உரிமை வழங்குவதற்காக நமது நாட்டில் இருந்த கருத்தடைச் சாதன உற் பத்தித் தொழிற்சாலையை மூடி விட்டதாக அவர்கள் குற்றஞ் சாட்டினர்.

கருத்தடைச் சாதனங்களை வழங் கும் நிறுவனத்தில், முன்னாள் மத் திய நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ண மாச்சாரியின் மகன்களுக்கு 5-சத விகிதத்திற்குமேல் பங்கு இருப்ப தாகவும், இதுபோன்ற நிறுவனங் களில் பணியாற்றுபவர்கள் அடிக் கடி வெளிநாடு செல்வதற்காகவே இத்தகைய ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன என்றும் சில உறுப் பினர்கள் கூறினர்.

சுகாதார அமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பதில் அளிக்கையில், 'நம் நாட்டில் தயாரிக்கப்படும் இச் சாதனங்கள், பயனுக்கு ஏற்ற தெனக் கருதப்படாததால் அயல் நாட்டிலிருந்து இறக்குமதிகள் செய்யப்படுகின்றன' என்று கூறி னர்.

"இந்திய நிறுவனங்களுக்குப் புதிய இயந்திரங்கள் தருவித்துக் கொடுத்து அவையும் நல்ல சாத னங்களைத் தயாரிக்க உதவுவதற்கு அரசு முயற்சி எடுத்துவருகிறது" என்றும் அவர் கூறினர்.

பஞ்சாங்கமும் அகில இந்தியமயமாம்

டில்லியில் கருத்தரங்கு

புதுடில்லி, நவ. 21—

இந்திய வான இயல் வல்லுநர் கள் — பஞ்சாங்கக் கணிதர்கள் கலந்துகொள்ளும் ஒரு கருத்தரங்கு இங்கு நடைபெற்றது; சுமார் 150-பேர் இதில் கலந்துகொண் டனர்.

அனைத்து இந்திய அடிப்படை யில் ஒரேமாதிரியான பஞ்சாங்கத் தைக் கணிப்பதற்கான ஏற்பாடு ஒன்றை வகுப்பதற்காக இக்கருத் தரங்கு ஏற்பாடு செய்யப்பட்ட தாம்.

"நாட்டின் பல பகுதிகளில் பல் வேறு நாட்களில் திருவிழாக்கள் வருகின்றன; சில சந்தர்ப்பங் களில் மேலும் ஒரு நகரத்திலேயே பல்வேறு நாட்களில் விழாக்கள் வைத்துக்கொள்ளப்படுகின்றன; இதனால் எந்த நாட்களில் நடக்கும் விழாவுக்கு விடுமுறை அளிப்பது என்ற சங்கடமான நிலைமை அர சுக்கு ஏற்படுகிறது" என்று கருத் தரங்கிற்குத் தலைமை தாங்கிப் பேசிய சட்ட அமைச்சர் கோவிந்த மேனன் கூறினர்.

மாலியில் புரட்சி

இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது

பாமாக்கோ, நவ. 19—

மாலியில் இராணுவப் புரட்சி ஏற்பட்டு, குடியரசுத் தலைவர் கெயிட்டா, பதவியிலிருந்து அகற் றப்பட்டுள்ளார்.

திரு. கெயிட்டா, மாலியின் விடு தலைக்காகப் போராடிய தலைவரா வார். இராணுவ முகாமில் இப் போது அவர் காவலில் வைக்கப் பட்டுள்ளார்.

புரட்சி நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத் தலைவர்களில் ஒருவ ரான மேஜர் மௌசா டிரவோர் என்பவர், நாட்டின் தலைமைப் பதவியை ஏற்றுள்ளார்.

சர்வாதிகாரத்துக்கு முடிவு கட் டவே புரட்சி நடந்ததாக அவர் கூறினர்; 'சுதந்தரமான தேர்தல் நடைபெறும்' என்றும் உறுதி மொழி வழங்கியுள்ளார்.

மாநிலங்கள் பெற்ற அதிகப் பற்று

புதுடில்லி, நவ. 19—

"ஏழு மாநில அரசுகள், ரிசர்வ் பாங்கியில் அதிகப் பற்றுப் பணம் பெற்றுக் கொண்டி ருக்கின்றன"

என்று நாடாளுமன்ற மேலவை யில், துணை நிதியமைச்சர் திரு. கே. சி. பந்த் தெரிவித்தார்.

1968 நவம்பர் 14-ஆம் நாள் வரை அவை பெற்றுள்ள அதிகப் பற்று:—

அசாம்: ரூ. 409 இலட்சம்; பீகார்: ரூ. 1973 இலட்சம்; கேர ளம்: ரூ. 18 இலட்சம்; தமிழகம்: ரூ 1114 இலட்சம்; கருநாடகம்: ரூ. 73 இலட்சம்; ஒரிசா: ரூ 990 இலட்சம்; இராஜஸ்தான்: ரூ 1,427 இலட்சம்.

இந்த அதிகப் பற்றுத் தொகை களை உடனடியாகச் செலுத்திவிடு மாறு இந்த மாநிலங்களைக் கேட் டுக் கொண்டிருப்பதாக அமைச் சர் மேலும் தெரிவித்தார்.

துணி ஏற்றுமதி அதிகரிக்கிறது

புதுடில்லி, நவ. 21—

கடந்த இரு ஆண்டுகளில் குறைந்திருந்த பருத்தித் துணி ஏற்றுமதிகள் இந்த ஆண்டில் அதிகரித்திருக்கின்றன.

1968 சனவரி முதல் ஆண்டு வரையில் ரூ. 60 44 கோடி அள வுக்கு ஏற்றுமதியாகியிருக்கிறது. சென்ற ஆண்டில் இதே காலத் தில் ரூ. 50.44 கோடிதான் ஆயிற்று.

பருத்தித் துணிகள் ஏற்றுமதி ரூ. 6.4 கோடி அதிகரித்திருக் கிறது; பருத்தி நூல் ஏற்றுமதி ரூ. 2 கோடி கூடுதலாகியிருக கிறது; ஆடைகள், மற்றும் ஏனைய பருத்தித் தயாரிப்புகள் ஏற்றுமதி யும் ரூ. 2 கோடி அதிகரித்திருக் கிறது.

இந்தோனேஷியா, சூடான், பிரிட்டன் முதலிய நாடுகளுக்கு பருத்தித் துணிவகைகளின் ஏற்று மதி விரிவடைந்துள்ளது

தெ. ஆ. மாவட்டத்தில் இறைவைப் பாசனம்

கலெக்டர் தயாரித்துள்ள தனித் திட்டம்

கடலூர், நவ. 19—

தென்னாற்காடு மாவட்டத்தில் விவசாயிகளுக்குக் கிணறுகள் — குழாய்க் கிணறுகள் — வடிமுனைக் குழாய்கள் ஆகியவற்றின் தேவை அதிகரித்துள்ளதை முன்னிட்டு அவற்றை ஏற்படுத்துவதற்காக ரூ. 1 கோடி செலவில் தோண்டும் பிரிவு ஒன்றை அமைப்பதற்கான திட்டத்தை, இம்மாவட்ட ஆட்சித் தலைவர் எல். எம். மெனசிஸ் தயா ரித்துத் தமிழக அரசுக்கு அனுப்பி யுள்ளார்.

இப்புதிய திட்டத்தின்படி, 3,000 கிணறுகளும், 2,500 குழாய் கிணறுகளும், 500 வடிமுனைக் குழாய்களும் இவ்வாண்டில் ஏற் படுத்தப்பட வேண்டும்.

இந்தத் தோண்டும் பிரிவு சென்னை வேளாண்மைத் தொழில் கழகத்தின் கிளையாகச் செயல்பட வேண்டும் எனவும், அதற்குப் பம் பாயிலுள்ள வேளாண்மை நிதிக் கழகம் நிதி உதவி அளிக்க வேண் டும் எனவும் மெனசிஸ் கூறியுள் ளார்.

பழுது பார்க்கும் பட்டறையை எல்லா நவீன சாதனங்களுடனும் தென் ஆற்காடு மாவட்டத்தில் மூன்று முக்கிய இடங்களில் நிறுவ வேண்டும் என்றும் அவர் யோசனை கூறியுள்ளார்.

இத்திட்டத்தை அரசு பரிசீலிப் பதாகவும் அவர் தெரிவித்தார்.

இளம் பெண்கள் கெடக்காரணம்என்ன?

ஆராய்ந்த குழுவின் அறிக்கை

"இளம் பெண்கள் வாழ்க்கை யில் தவறி நடப்பதற்குக் காரணம் என்ன?" என்பது பற்றி ஆராய, மத்திய அரசு, குழு ஒன்றை நிய மித்தது; அந்தக் குழுவினர், சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற பெரிய நகரங் களில் தங்கியிருந்து, நேரடியாக விசாரணை நடத்தினர்; விசாரணை முடிந்ததும், கீழ்வரும் அறிக்கை யைத் தாக்கல் செய்தனர்:—

"இந்தியாவில் சில பெண்கள் வாழ்க்கையில் வழுக்கிவிழ்ந்து, தவறான வழிகளில் செல்கிறார் கள்; பழைய காலத்தில், வறுமை மட்டுமே இதற்கு முக் கிய காரணமாக இருந்துவந்தது; இப்போது அப்படி அல்ல; வறுமை தவிர, மேலும் சில கார ணங்களும் அவர்கள் மனத்தைப் பாழாக்குகின்றன.

"குடும்பத் தகராறு — கணவ னால் புறக்கணிக்கப்படுதல் — கணவன் மூலம் மனநிறைவு கிடைக்காதது — சிற்றின்பத் தையே நாடும் மனப்போக்கு — கீழ்த்தரமான திரைப் படங் கள் — இவை போன்ற காரணங் களால், பெண்கள் தவறான பாதையில் இறங்குகிறார்கள்.

"இந்த மாதிரி கெட்டுப்போகும் பெண்களில் 100-க்கு 49 பேர் திருமணம் ஆனவர்களாக இருக் கிறார்கள்; 100-க்கு 39 பேர் விதவைகள் அல்லது மண விலக் குச் செய்தவர்களாக இருக்கிறார் கள்.

"பெரும்பாலும் 16 வயதுமுதல் 22 வயது வரையுள்ள பெண்கள் தான் எளிதில் திசை மாறுகிறார் கள்; கல்வியறிவு அதிகம் இல் லாத பெண்கள்தான் இந்த நிலைக்கு ஆளாகிறார்கள்.

"இப்படிப்பட்ட சூழ்நிலைக்குத் தள்ளப்படும் பெண்களை, விடு திச் (லாட்ஜ்) சொந்தக்காரர்கள் பயன்படுத்திக் கொண்டு — அதன் மூலம் நல்ல இலாபம் சம்பாதிக்கிறார்கள். இதில் ஈடு படுபவர்களை அடையாளம் கண்டுபிடிப்பது சிரமமானதா கும்."

பம்பாய்த் தமிழ் மாணவர் மன்றம்

மாணவர் விழாப் போட்டிகள்

பம்பாய்த் தமிழ் மாணவர் மன் றச் சார்பில் டிசம்பர் திங்களில் நடைபெறவிருக்கும் மன்ற மாண வர் விழாவினையொட்டி கட்டுரை — பேச்சு — திருக்குறள் போட்டிகளை நடத்திட ஆவன செய்யப்பட்டுள் ளன.

இப்போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் மாணவ-மாண விகள், போட்டி ஒன்றுக்கு 25 காசு நுழைவுக் கட்டணத்துடன் நவம்பர் 22-ம் நாளுக்குள் தங்களது பெய ரினை நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

கட்டுரைப் போட்டி:—உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் ('நான் காணும் பம்பாய்'); கல்லூரி மாணவர்கள் ('காந்தியடிகள்').

பேச்சுப் போட்டி:— உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் ('பாரத நாடும் வீரமும்'); கல்லூரி மாண வர்கள் ('வாழ்க்கையில் குறள்').

திருக்குறள் போட்டி:—இப்போட் டியில் திருக்குறள் செய்யுட்களை, வகுப்பிற்குத் தக்கவாறு மனப் பாடமாக நினைவுபடுத்தி, செவ் வையாகக் கூறுதல் வேண்டும். இப்போட்டி பற்றிய விவரங்களை நேரில் தெரிந்துகொள்ளலாம்.

மேற்கண்ட மூன்று போட்டி களும், 24—11—1968 அன்று பம்பாய் (மாதுங்கா) போதார் கல்லூரியில் நடைபெறும்.

மன்ற உறுப்பினர்கள் நுழைவுக் கட்டணமின்றிப் போட்டிகளில் கலந்துகொள்ளலாம்; பம்பாயில் பள்ளி, கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவ — மாணவிகள் மட்டுமே போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க.

குழுக் கூட்ட அறிவிப்பு

செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க. உறுப்பினர் கூட்டம் 1-12-68 ஞாயிறு காலை 9 மணிக்கு மது ராந்தகம் மலையம்பாளையம் பயணிகள் விடுதியில் நடை பெறும்; ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானங்கள் அனுப்பும் தோழர்கள், 27—11—68-க்குள் அனுப்பித் தருமாறு கோருகிறேன்; முன் னறிவிப்பு இல்லாமல் கொண்டுவரும் பிரச்சினைகள் கண்டிப்பாக ஆய்வுக்கு எடுத் துக்கொள்ளப்பட மாட்டாது.

"கழக வளர்ச்சி, மாவட்டக் கழக நிதி, நகராட்சித் தேர்தல் ஆகியவை குறித்துப் பரிசீ லிக்கப்படும்.

"சிறப்பு அழைப்பாளராக நாடாளுமன்ற—சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் கலந்துகொள்ளக் கோரு கிறேன்"

என்று செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் கே. டி. எஸ். மணி அறிவிக்கிறார்.

மயிலை சிவமுத்துவுக்கு சிலையமைக்கும் பணி

நிதியுதவ வேண்டுகோள்

"தமிழ் நெறிக் காவலர் மயிலை சிவமுத்து அவர்கள் தம் வாழ் நாளெல்லாம் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கும், மாணவர்களின் முன்னேற்றத்துக் கும் அரும்பாடுபட்டவர்.

சென்ற முப்பதாண்டுகளுக்கு மேலாகத் தம் இல்லத்தை மறந்து — மக்களை மறந்து — மாணவர் மன் றத்திலேயே தங்கியிருந்து — மன்ற வளர்ச்சிக்கே தம்மை ஒப்படைத் துக்கொண்டவர்; இரவென்றும் பகலென்றும் — வெயிலென்றும் — பனியென்றும் பாராமல் — மன் றத்தைத் தம் கண்மணி போல் காத்தவர்; பல இளை ஞர்களையும் தமிழாசிரியர்களையும் மன்றப் பணியில் ஈடுபடுத்தி அதன் ஆக்கம் கண்டு அகம் மகிழ்ந்தவர்; மன்றத்தின் பல துறைப் பணிகளும் செயல்படும் வண்ணம் மன்றத்துக்கென இரண்டு இலட்சம் ரூபாய் மதிப் புள்ள சொந்தக் கட்டிடம் உருவா வதற்கு வித்திட்டவர்.

மன்றக் கட்டிடம் இன்று தமி ழன்னையின் திருக்கோயிலாக விளங்குகிறது; ஆண்டுதோறும் ஆசிரியர்களும், மாணவர்களும் வந்து தங்குவதற்குகந்த தமிழ் நிலையமாக விளங்குகிறது.

இங்ஙனம் மாணவர்களின் மணி விளக்காய் — தமிழாசிரியர்களின் தந்தையாய் — தமிழ் அன்னையின் கண்மணியாய் விளங்கிய தமிழ் நெறிக் காவலர் அவர்களின் தொண்டு கொள்கையும், என்றும் நம் உள்ளத்தே பசுமையோடிக் கொண்டிருக்கும்வகையில் அவர் தம் திருவுருவச் சிலையை மன்றக் கட்டிடத்தே நிறுவவேண்டும் என அன்பர்கள் பலரும் விழைகின் றனர்.

செயற்கரிய செய்த செந்தமிழ்ப் புலவர் ஒருவரின் சிலையமைப்புக் குத் தங்களால் இயன்ற பொரு ளுதவி புரியுமாறு தமிழ் நெறிக் காவலர் அவர்களிடத்தே அன்பும் மதிப்பும் உடைய பெருமக்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

சிலையமைப்புக்கு ஏறக்குறைய ரூ 15,000 செலவாகும் எனக் கருதுகின்றோம்.

நன்கொடை அனுப்பவேண்டிய முகவரி:—பொருளாளர், மாண வர் மன்றம், 12, வேங்கட ஐயர் தெரு, சென்னை-1"

என, மன்றச் செயலாளர் தணிகை உலகநாதன், அன்பு கணபதி ஆகி யோர் வேண்டுகோள் விடுத்துள்ள னர்.

இளைஞர் காங்கிரசார் வன்செயல்

85 பேர்கள்மீது குற்றச்சாட்டு

சென்னை, நவ. 20—
கடந்த ஆகஸ்டு முதல் நாளன்று சென்னையில் இளைஞர் காங்கிரசார் நடத்திய ஊர்வலத்தின்போது, காந்தி-இர்வின் பாலம் அருகில் நடைபெற்ற கலவரம் தொடர்பாக 85-பேர்கள்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஊர்வலத்தில் சென்றவர்கள் அரசுக்கு எதிராகக் கீழ்த்தரமான முறையில் முழக்கமிட்டுச் சென்றதாகவும், ஊர்வலம் காந்தி-இர்வின் பாலத்திற்கு அருகில் சென்றபோது குறிப்பிட்ட பாதையை விட்டு, 'தினத் தந்தி' அலுவலகத்தை நோக்கிச் சென்றதாகவும், அப்போதைய சட்டப் பேரவைத் தலைவர் சி. பா. ஆதித்தனுக்கு எதிராக முழக்கமிட்டதாகவும், இச் செய்கையைத் தடுக்க முயன்றபோது போலீசார்மீது கல், செருப்பு, செங்கற்களை வீசியதாகவும் குற்றப் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

மேலும், அங்கு போலீசுப் புகைப்படக்காரர்கள் புகைப்படம் எடுக்க முயலுகையில் அவர்களும் தாக்கப்பட்டதாகவும், எதிரிகள் போலீசு வண்டிகளைச் சூழ்ந்து கொண்டு அவற்றைத் தாக்கியதாகவும், ஒரு போலீசு மோட்டார் சைக்கிளுக்குத் தீ வைத்ததாகவும், போலீசு அதிகாரிகளைத் தாக்கியதாகவும் குற்றப் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

மாநிலங்களவையில் வெளி நடப்பு

புதுடில்லி, நவ. 20—
"அரசு—ஊழியர் வேலை நிறுத்தம் சம்பந்தமாகத் தலைமையமைச்சர் இந்திராகாந்திதான் பேச வேண்டும்" என இரு கம்யூனிஸ்டுக் கட்சிகளின் உறுப்பினர்களும் சம்யுக்த சோசலிஸ்டுக் கட்சி உறுப்பினர்களும் இன்று மாநிலங்களவையில் கோரினர்.

உள்துறை அமைச்சர் சவானை ஏறத்தாழ இருபது நிமிடநேரம் வரை பேசவிடாமல் அவர்கள் தடுத்தனர்.

துணை அவைத் தலைவர் திருமதி. வயலெட் ஆல்வா, அவர்களது கருத்தைத் தாம் ஏற்பதற்கில்லையெனக் கூறி அவையில் ஒழுங்கை நிலைநாட்ட பலதடவைகள் முயன்றார்; ஆனால் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அதற்குச் செவி சாய்க்காமல், அவையை விட்டு வெளி நடப்பு செய்தனர்.

அயூப் அரசுமீது நிர்ப்பந்தம்

லாகூர், நவ. 21—
"கட்டுப்பாடான முறையிலும், சட்டபூர்வமான வழிகளிலும் அயூப்கான் அரசுமீது பாகிஸ்தான் மக்கள், நிர்ப்பந்தம் கொண்டுவர வேண்டும்.

"பலாத்காரம் -- அடக்குமுறைகள் மூலமே அயூப் அரசு, அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறது"

என்று பாகிஸ்தானின் முன்னாள் விமானப் படைத் தளபதி ஏர்-மார்ஷல் அஸ்கர் கான் அறைகூவியுள்ளார்,

பரிசுச் சீட்டுத் திட்டம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற மேலவையில் தில்லைவில்லாளன் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

அரியானா, கேரளம், தமிழகம், பஞ்சாப், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இப்போது பரிசுச் சீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுவதாக அவர் மேலும் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

22--11--68

எரியோடு

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு சந்தைத் திடலில்; தலைவர்: சி. வெள்ளிமலை; பேசுவோர்: கேரளசுந்தரம், வி.எஸ். எஸ். மணி, ப. முத்துசாமி, டாக்டர் இரா. முனியப்பன், வி. நாகசுந்தரம், எம்.கே.ஏ.சாமி, கே.இ. தமிழ்மாறன், பரமேசுவரன், கே. மயில்வாகனம், பொ. கருப்பு சாமி.

சென்னை 91-வது வட்டம்

தி.மு.க. மாலை 7 மணிக்கு மயிலை வீரப்பெருமாள் முதலித் தெருவில்; தலைவர்: சி.எம். சாமி; பேசுவோர்: அமைச்சர் மா. முத்துசாமி, ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., மயிலைமாறன், எம்.கே. காளத்தி, எம்.கே. கபாலி, டி. கோவிந்தன், மூ. சீனிவாசன், ஆர்.சி.கே. சாமி, டி. அரங்காநாதன், கி. நடராசன்.

ஆலந்தூர் நகர தி.மு.க.

பொது உறுப்பினர் கூட்டம்

"ஆலந்தூர் நகர தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் 24—11—68 காலை 8 மணிக்கு இந்துமத பாடசாலையில் -- என் தலைமையில் -- நடைபெறும்; வரும் நகராட்சித் தேர்தல், கழக வளர்ச்சி ஆகியவைகள் குறித்துப் பரிசீலிக்கப்படும்; கழக உறுப்பினர்கள் மட்டும் குறிப்பிட்ட நேரத்திலேயே தவறாது கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

என்று மாவட்டச் செயலாளர் கே. டி. எஸ். மணி அறிவிக்கிறார்.

தஞ்சை மாவட்ட ஆசிரியர்கள் மாநாடு

தஞ்சை மாவட்ட ஆசிரியர் கழகத்தின் 58-வது ஆண்டு மாநாடு, 23—11—68 காலை 10-30 மணிக்கு தஞ்சாவூர் அரண்மனை இசையரங்கில் நடைபெறும்; தமிழகச் சட்டமன்றத் துணைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் மாநாட்டைத் துவக்கிவைப்பார்; திரு. ஆர். இராசகோபாலன் தலைமை வகிப்பார்; மறைத் திரு. சி. கே. சுவாமி, டாக்டர் எம். கிருஷ்ணசாமி, காப்டன் டி. முருகையன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

நரசிங்கபுரம்

நூலகத் திறப்பு விழா

செங்கற்பட்டு மாவட்டம்—நரசிங்கபுரம் கிளை நூலகத் திறப்பு விழா 23-11-68 மாலை 5 மணிக்கு சி.வி.எம். அண்ணாமலை எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறும்; கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் துவக்கிவைப்பார்; கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் க. சுப்பராயனார், சென்னை மாநகராட்சி உறுப்பினர் சா. கணேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

நிக்சனின் முதற்கவலை

நகைச்சுவை நடிகர் பேச்சு

கனடா, நவ. 20—
"அமெரிக்க அதிபராகப் பதவி ஏற்கும் வரையில் உயிருடன் இருப்பதே இப்போது நிக்சனுக்கு உள்ள பெரிய பிரச்சினையாகும்"

என்று நீக்ரோ நகைச்சுவை நடிகர் டிக்கிரிகரி கூறியிருக்கிறார்.

2000 பல்கலைக்கழக மாணவர்கள் அடங்கிய கூட்டத்தில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தியா -- செஞ்சீன உறவு நிலை

இந்திரா காந்தி விளக்கம்

புதுடில்லி, நவ. 20—
"இந்தியாவிடம் செஞ்சீனா கொண்டுள்ள விரோதப்போக்கு தொடர்ந்து இருந்து வருகிறது: அந்நாட்டுடன் இராசதந்திர உறவுகளை முறித்துக்கொள்வதால் நிலைமையில் எவ்வித மாறுதலும் ஏற்பட்டுவிடாது"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, மக்களவையில் தெரிவித்துள்ளார்.

தர்ம தேஜா

பங்கு பறிமுதல்

புதுடில்லி, நவ. 21—
"'ஜெயந்தி கப்பல் நிறுவன'த்தின் முன்னாள் டைரக்டரான தர்ம தேஜாவுக்குச் சொந்தமான ரூ. 2.12 கோடி பெறுமானமுள்ள பங்குகளையும், ரூ. 30,000 மதிப்புள்ள அவரது காரையும் அரசு பறிமுதல் செய்திருக்கிறது"

என்று மக்களவையில், கேள்வி நேரத்தின்போது தெரிவிக்கப்பட்டது.

புது வகை நெல் விதை

ஆடுதுறையில் கண்டுபிடிப்பு

கும்பகோணம், நவ. 21—
ஆடுதுறை வேளாண்மை ஆய்வு நிலையத்தில் 'ஏ.ஏ.டி.-28' என்ற புது வகை நெல் விதை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த வகை நெல்லுக்கு, தண்ணீர் அதிகமாக இருந்தாலும் அதைத் தாங்கிக்கொள்ளக்கூடிய சக்தியிருக்கிறது.

போதுமான வடிகால் வசதி இல்லாத பகுதிகளில் -- குறிப்பாக தஞ்சை மாவட்டக் கடற்கரையோரப் பகுதிகளில் -- இந்த ரக நெல்லைச் சாகுபடி செய்யலாம்.

'ஏ.டி.டி.-27' — 'சி.சி.-25' ரகங்களைவிட உயர்ந்த ரகங்களைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சிகள் நடந்துவருகின்றன.

மூன்றாவது குலுக்கலுக்கான பரிசுச் சீட்டுக்கள்

நாளை முதல் விற்பனை துவங்கும்

சென்னை, நவ. 21—
தமிழக அரசு நடத்தும் பரிசுச் சீட்டுக்களில் 'டி', 'யு' என்ற புது வரிசைகள் வெளியிடப்படும்.

நாளை சென்னை நகரிலும், 23-ம் நாள் சனியன்று மாவட்டங்களிலும் விற்பனைக்கு வரும்.

"டிசம்பர் 20-ம் நாள் புதிய வரிசைகளின் சீட்டுக் குலுக்கல் நடக்கும்; அதற்கு எத்தனை வரிசைகள் வெளியிடுவதென்பது, மக்களின் கோரிக்கையைப் பொறுத்திருக்கிறது" என்று அரசுப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

கெய்ரோன் கொலை வழக்கு

தேடப்பட்டவர் கைது

பாடின்டா, நவ. 21—
பஞ்சாபின் முன்னாள் முதலமைச்சர் சர்தார் பிரதாப் சிங் கெய்ரோன் கொலை வழக்கினையொட்டிப் போலீசாரால் தேடப்பட்டு வந்த தயாள் சிங் என்பவன் கைது செய்யப்பட்டுவிட்டதாகத் தெரிய வருகிறது.

ஐந்தாண்டுகளில் வாங்கிய கடன்

புதுடில்லி, நவ. 21—
1967—68-ம் ஆண்டுடன் முடிவடையும் ஐந்தாண்டுக் காலத்தில் அனைத்து நாட்டு வளர்ச்சிக் குழுவிலிருந்து இந்தியா பெற்றுள்ள கடன்கள் பற்றிய விவரங்களை நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்.

மொத்தம் அனுமதிக்கப்பட்ட ரூ. 458.25 கோடியில் ரூ 418.02 கோடியை இந்தியா வாங்கிக் கொண்டிருக்கிறது.

இந்தக் கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்கான தவணை 1972-73-ல் ஆரம்பமாகிறது.

நீதி வழங்கத் தவறிவிட்டது நிதிக் குழு

மற்ற மாநிலங்களும் மனங்குமுறுகின்றன

பெங்களூர், நவ. 19—
நிதிக் குழுவின் இடைக்கால அறிக்கையில் கருநாடக அரசும் அதிருப்தி தெரிவித்திருக்கிறது.

"அரசு ஊழியர்களுக்குக் கூடுதலாகக் கிராக்கிப் படி தருவதால், மாநிலத்திற்கு மாதந்தோறும் ஏற்படக்கூடிய செலவினங்களை நிதிக் குழு கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது" என, அரசு வெளியிட்ட பத்திரிகைக் குறிப்புக் கூறுகிறது.

குழுவிற்கு மாநில அரசு ஏற்கனவே கொடுத்துள்ள அறிக்கையில் கண்டுள்ள பல்வேறு பிரச்சினைகளை இறுதி அறிக்கை தயாரிக்கும்போது அது கவனத்தில் வைத்துக் கொள்ளுமென நம்புவதாகப் பத்திரிகைக் குறிப்பு கூறுகிறது.

வங்கமும் எதிர்க்கிறது

கருநாடகத்தைப் போலவே மேற்கு வங்க அரசிலும் நிதிக் குழுவின் இடைக்கால அறிக்கை கொஞ்சமும் மகிழ்ச்சியைத் தரவில்லை.

"தற்போது குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெறும் அந்த மாநிலத்தில் நிலவும் தனித்தன்மை வாய்ந்த சூழ்நிலையை நிதிக் குழு அடியோடு புறக்கணித்துவிட்டது" என்று மேற்கு வங்க அரசு அதிகாரி ஒருவர் கூறினார்.

"குழு, மேற்கு வங்கத்திற்கு ஒதுக்கியுள்ள தொகை அறவே திருப்தியற்றதாகும்" என்று கூறிய அவர், 'இறுதி அறிக்கையில், மாநிலம் ஏற்கனவே குழுவிடம் கொடுத்துள்ள அறிக்கையில் கண்டுள்ள மாநிலத்தின் தனிக் கோரிக்கைகளுக்கு முற்றிலும் நியாயம் வழங்கும் என நம்புகிறேன்' எனவும் குறிப்பிட்டார்.

[நிதிக் குழு இடைக்கால அறிக்கை பற்றி ஏற்கனவே தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களும், ஆந்திர முதல்வர் பிரும்மானந்த ரெட்டியும் அதிருப்தி தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.]

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மருத்துவமனை, இன்று 315 டாக்டர்களையும், 305 நர்சுகளையும், 273 உதவியாளர்களையும்; 1417 ஊழியர்களையும் கொண்ட ஒரு தனி மருத்துவ நிலையமாக உருவாகியிருக்கிறது.

1967—68-ம் ஆண்டில் மட்டும் 1,22,375 நோயாளிகளைக் கண்காணித்துக் கொண்டே இந்த மருத்துவமனையைச் சேர்ந்த கல்விக் கூடங்களில் 927 மாணவர்கள் மருத்துவப் படிப்பில் ஈடுபட்டுவருகின்றனர்.

1,077 படுக்கைகளையும், பல்வேறுபட்ட சமூக -- மருத்துவ வசதிகளையும் செய்துதரும் வேலூர் மருத்துவமனையின் ஆண்டுச்செலவு ஒரு கோடி ரூபாய்க்குமேல் ஆகிறது; நன்கொடைகள், மருத்துவக் கட்டணங்கள் மூலம் கிடைக்கும் நிதியிலிருந்து மட்டுமே இது சரிகட்டப்படுகிறது.

"ஓர் அறுவைச் சிகிச்சைக்கூடம் அமைக்க ரூ. 1,90,000 உதவலாம்; அல்லது ஒரு தொழு நோயாளியின் கால்களுக்குச் செருப்புகள் தயாரிக்க ரூ. 15 அளிக்கலாம்; உங்களால் முடிந்தனவற்றைக் கொடுத்து ஆதரியுங்கள்" என்ற மருத்துவமனையின் வேண்டுகோள் இதயத்தைக் கனிவு கொள்ளச் செய்கிறது!

தமிழகத்தில் மட்டுமல்ல --- இந்தியா முழுமையிலும் அல்ல -- உலகம் முழுவதிலும் பிரபலமாகியிருக்கும் இந்த மருத்துவமனைக்கு நாடுகள் பலவற்றிலிருந்தும் நோயாளிகள் பலர் வருகின்றனர் என்பதனை, குறிப்பிட்ட ஓர் ஆண்டின் எண்ணிக்கைப் பட்டியல் விளக்கும்:—

ஆப்பிரிக்கா	1	நேபாளம்	33
ஆஸ்திரேலியா	5	பெர்சியன் வளைகுடா	20
பர்மா	2		
இலங்கை	39	இங்கிலாந்து	1
மலேசியா	20	அமெரிக்கா	6

குறிப்பிட்ட ஓர் ஆண்டில், இந்தியா முழுவதிலுமிருந்தும் இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை மாநில வாரியாக வருமாறு:—

தமிழகம்	14,254	மத்தியப்பிரதேசம்	80
கேரளம்	1,426	ஒரிசா	195
மைசூர்	748	இராஜஸ்தான்	30
ஆந்திரம்	3,018	பஞ்சாப்	14
கோவா	5	ஜம்மு காஷ்மீர்	4
மாராட்டிரம்	68	உத்தரப்பிரதேசம்	52
குசராத்	14	புதுடில்லி	28
வங்காளம்	194	பீகார்	162
அசாம்	54	மணிப்பூர்	2
நாகாலாந்து	2		

"ஆமாம்; வேலூருக்குப் போய் பார்த்து வருவதுதானே" என்ற யோசனை இந்தியாவின் மூலைமுடுக்குகளிலெல்லாம் கேட்கிறதென்றால்; அதற்கு இங்குள்ள டாக்டர்களின் திறமையும் மருத்துவமனையின் நிர்வாகமும்தான் காரணம்!

வசதியுள்ளவர்களிடம் கட்டணம் வாங்குவதற்கு அஞ்சாத இந்த மருத்துவமனையின் நிர்வாகத்தினர், ஏழைகளுக்கு வேறு எங்கும் கிடைக்காத வசதியுடன்கூடிய சிகிச்சையளிப்பதற்கும் தயங்குவது கிடையாது!

'உங்கள் மருத்துவமனையின் சிறப்புக்கு என்னதான் காரணம்' என்று துருவித் துருவிக் கேட்டால்கூட, இங்குள்ள மருத்துவர்கள் சிரித்து மழுப்புகிறார்களே தவிர, சரியான காரணம் சொல்ல மறுக்கிறார்கள்! அது, தொழில் இரகசியம்!

"எந்த ஒரு டாக்டரும் தனிப்பட்ட முறையில் தொழில் பார்க்க அனுமதிப்பது கிடையாது; இரவும் பகலும் அவர்களது உழைப்பும் திறமையும் இந்த மருத்துவமனைக்கு மட்டுமே பயன்படும்" என்றார் -- அந்த மருத்துவமனையின் உயர் அதிகாரி ஒருவர்!

ஒருவேளை, அதுதான் வேலூர் கிறித்துவ மருத்துவமனையின் சிறப்புக்குக் காரணமோ என்னவோ!